# முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

முன்னிலை : திருமதி.  A. முத்துசாரதா, B.L., P.G.D.P.M.
முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்

2026 ம் ஆண்டு மார்ச்   திங்கள் 5 ம் நாள் வியாழக்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.53/2024–ல் இ.ம.எண். 2/2025</u>**

M.P. ஆறுமுகம்
த/பெ. பழனியப்ப கோனார்

.... மனுதாரர் /வாதி

/ எ திர் /

1. M.P. முருகன்
   த/பெ. பழனியப்ப கோனார்
2. M.P. கணேசன்
   த/பெ. பழனியப்ப கோனார்

.... எதிர்மனுதார்கள்/ பிரதிவாதிகள்

இந்த மனு என் முன்னர் 20.02.2026 ம் நாளன்று விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு P. வேல்முருசன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு S. செல்வகுமார், அவர்கள் முன்னிலையாகியும், மனு உரை, எதிருரை மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டும் இன்று இம்மன்றத்தால் பிறப்பிக்கப்படும் :

**<u>உ த் த ர வு</u>**

மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால் மனுதாரர் தரப்பு பதிலுரையை ஏற்றுக்கொள்ள

உத்தரவிடக்கோரி உவிமுச கட்டளை 8 விதி 9 மற்றும் பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுதாரர்/வாதியால் மனுவிற்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் பின்வருமாறு</u> :–

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. தாவாச் சொத்தானது முருகாண்டி கோனார் என்பவருக்குப் பாத்தியப்பட்ட சொத்தாகும். மேற்படி முருகான்டி கோனார் கடந்த 22.02.1971ம் தேதி மனுதாரருக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் பதிவு செய்த உயில்படி சொத்தினை பாத்தியப்படுத்திவிட்டு காலாமாகிவிட்டார். மேற்படி உயில் அசல் ஆவணம் 2ம் எதிர்மனுதாரர் வசம் உள்ளது. மனுதாரரும் எதிர்மனுதாரர்களும் உடன்பிறந்த சகோதரர்கள் ஆவார்கள். தாவாச் சொத்திற்கு மனுதார் மற்றும் எதிர்மனுதாரர்கள் பெயரில் பட்டா ஏற்பட்டு உபய மனுதாரர்கள் தாவாச் சொத்துக்களை கண்டேத்தமாக அனுபவித்து வருகிறார்கள். தாவாச் சொத்தினை பாகம் பிரித்துக் கொடுக்கக் கோரி மனுதாரர் துயர்ந்தும் எதிர்மனுதாரர்கள் காலம் கடத்தி வருகின்றார். தாவாச் சொத்தினை பிரித்துத் தரக் கோரி மனுதாரர் 13.4.2023ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பியதை எதிர்மனுதாரர்கள் பெற்றுக்கொண்டதை 23.5.2023 மற்றும் 26.5.2023ம் தேதிகளில் பதிலறிவிப்பு அனுப்பியுள்ளார்கள். மனுதாரர் தாவாச் சொத்தினை முறையான வகையில் தனித்துப் பெற முயற்சி செய்தாலும் 2ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞராக தொழில் செய்வதால் தாவா சொத்தினை பாகம் பிரித்துக் கொடுக்காமல் காலம் கடத்தி வருகிறார். தாவாச் சொத்தில் மனுதாரருக்குரிய 1/3

பாகத்தினை பிரித்துத் தரக்கோரி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த எதிர்வழக்குரைக்கு கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யவேண்டியது அவசியமாக உள்ளது. ஆகையால், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படும் பதிலுரையை ஏற்றுக் கொள்ளக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுப்படி தீர்ப்பாகவேண்டும்.

3) **<u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:-</u>**

தாவாச் சொத்தானது முருகாண்டி கோனார் என்பவருக்குப் பாத்தியப்பட்டது என்பதும், மேற்படி முருகாண்டி கோனார் 22.2.1971ம் தேதி உபயமனுதாரர்களுக்கு பதிவு செய்த உயில்படி தாவாச் சொத்தினை பாத்தியப்படுத்திவிட்டு இறந்துவிட்டார் என்பதும், உயில் அசல் ஆவணம் 2ம் எதிர்மனுதாரர் வசம் உள்ளது என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. மனு உரைச் சங்கதிகள் மறுக்கப்படுகின்றன. உபயமனுதாரர்களின் பாட்டனார் முருகாண்டி கோனாருக்கு ஆண் வாரிசு உபயமனுதாரர்களின் தகப்பனார் பழனியப்ப கோனார் மட்டுமே ஆவார். மேற்படி பழனியப்ப கோனார் 1982-1983ம் ஆண்டு வாக்கில் தாவாச் சொத்தை மூன்றாக பிரித்து 3 வீடுகள் கட்டி, 3 வீடுகளில் ஒரு வீடு மனுதாரருக்கு பாகமாக ஒதுக்கப்பட்டு, 1988ம் ஆண்டிலிருந்து மனுதாரர் சுவாதீனமடைந்து 1990ம் ஆண்டு வரை அனுபவம் செய்து, 1991ம் ஆண்டிற்குப் பின்பு மனுதாரர் தான் அனுபவித்து வந்த வீட்டை வாடகைக்கு விட்டுள்ளார். மற்ற 2 வீடுகள் எதிர்மனுதாரர்களுக்கு ஒதுக்கப்பட்டு வரி வகையறாக்கள் செலுத்தப்பட்டு அனுபவித்து வரப்படுகிறது. தாவாச் சொத்திற்கு அருகில்

உபயமனுதாரர்களின் தகப்பனாருக்குப் பாத்தியப்பட்ட கிரைய சொத்துக்களில் வணிக வளாகம், குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு பொது அனுபவம் செய்யப்பட்டு வந்ததில் உபயமனுதாரர்கள் மற்றும் அவர்கள் உடன்பிறந்த பெண் வாரிசுகள் ஆகியோர்களுக்கிடையே குடும்ப சொத்துக்களைப் பொறுத்து கடந்த 7.10.1991ம் தேதி பாகப்பிரிவினை ஆவணம் எழுதி பதிந்து பிரித்துக் கொள்ளப்பட்டது. தாவா சொத்து தென்புறத்தில் கிழமேல் 103 அடி, வடபுறத்தில் கிழமேல் 98 அடி எனவும், கீழ்புறம் பகுதியில் தென்வடல் 42 அடி எனவும், மேல்புரத்தில் தென்வடல் 41 அடி எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பழனியப்ப கோனார் தாவாச் சொத்தில் 1981–1982ம் ஆண்டு 3 வீடு கட்டுவதற்கு கட்டுமானப் பணி மேற்கொண்டபோது நில அமைப்பை சரி செய்ய வேண்டி வடபுறத்திலும் தென்புறத்திலும் சந்துப் பாதை வைத்து கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. மனுதாரருக்கு நடுப்புறமாக அமைந்துள்ள வீடு 1988ம் ஆண்டு வாக்கரால் பாகத்தில் ஒதுக்கப்பட்டது.7.10.1991ம் தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் 1,2 எதிர்மனுதாரர்களுக்கு சேர்த்து 'பி' லக்கச் சொத்துக்கள் பாகமாக 1320 சதுரடி ஒதுக்கப்பட்டது. பாகப்பிரிவினையில் வாதிக்கு "சி" லக்கச் சொத்தான 1511 சதுரடி பாகமாக ஒதுக்கப்பட்டது. 1991ம் ஆண்டு பாகப்பிரிவினையில் மனுதாரருக்கு கூடுதல் பாகம் ஒதுக்கப்பட்டது. மனுதாரர் குடும்பத்திற்குள் ஏற்பட்டுள்ள பாகப்பிரிவினை குறித்து முழுமையான உண்மை விபரங்களை நீதிமன்றத்திற்கு தெரிவிக்வில்லை. 1991ம் ஆண்டு நடைபெற்ற பாகப்பிரிவினை ஆவணத்தில் அனைத்து பாகஸ்தர்களும் சேர்ந்து "நமக்குள் இனிமேல் பிரிக்கப்படவேண்டிய

சொத்துக்கள் எதுவும் கிடையாது" என வாசகம் எழுதப்பட்டுள்ளது. பாகஸ்தர்களுக்கிடையே பாகப்பிரிவினை ஏற்பட்டு சுமார் 42 ஆண்டுகளுக்கு மேலாக யாவரும் அறியும் வண்ணம் நீண்ட நெடுங்காலமாக சட்ட காலத்திற்கும் மேலாக தொடர்ச்சியாக அனுபவம் செய்து வருவதால் வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. எனவே, மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4) இரு தரப்பிலும் சாட்சிய, சான்றாவணங்கள் ஏதும் முன் வைக்கப்படவில்லை. இரு தரப்பும் கேட்கப்பட்டது.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

**6) தீர்வு**

வழக்கு கோப்பு ஆராயப்பட்டது. மனுதார் வாதியாக இருந்து அசல் வழக்கினை பாகப்பிரிவினை கோரி அசல் வழக்கினை தாக்கல் செய்து, எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனைவு செய்வதற்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் வாதி மனுதாரராக இருந்து அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கு பதிலுரை தாக்கல் செய்யவேண்டியது அவசியமாக உள்ளது என சொல்லப்பட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதை காணமுடிகிறது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவாச் சொத்துக்கள் 42 ஆண்டுகளுக்கு முன்பே வாக்கரால் பாகம் பிரிக்கப்பட்டு, அவரவர் பாகத்திற்கு வரி வகையறாக்கள் செலுத்தி சட்ட காலத்திற்கும் மேலாக அனுபவித்து வருவதாகவும், இனிமேல்

பிரிக்கப்படவேண்டிய சொத்துக்கள் எதுவும் இல்லை என்றும், மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் மறுப்பு தெரிவிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யவிருக்கும் கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்று, அதனையும் பரிசீலித்து அசல் வழக்கில் ஒரு இறுதியான தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுவதால் இம்மனுவினை அனுமதிக்கப்படத்தக்கது என இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவில், இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டு, 2026 ம் நாளன்று மார்ச் திங்கள் 5ம் நாளாகிய இன்று திறந்த அவையில் அவையறியப் பகரப்பட்டது.

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.03.06 15:28:51 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்.**

இரு தரப்பிலும் சாட்சிய, சான்றாவணங்கள் : இல்லை.

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.03.06 15:28:54 +0530

**மு மா நீ.,**
**திண்டுக்கல்.**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்
திண்டுக்கல்
அ.வ.எண் 53/2024–ல்
இ.ம.எண் 2/2025
நாள் 05.03.2026
உத்தரவு